

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் திண்டிவனத்தில் மாவட்ட அவைத் தலைவரும், செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் தலைமையில் நடைபெற்ற தி.மு.க. மாவட்ட நிர்வாகிகள் அவசர ஆலோசனைக் கூட்டத்தில் கழகத் துணை பொது செயலாளர் ,வனத்துறை அமைச்சர் டாக்டர் க. பொன்முடி சிறப்புரையாற்றினார்.உடன் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் ப. சேகர்,தொகுதி பொறுப்பாளர்கள் மயிலம் இள. புகழேந்தி, செஞ்சி அப்துல் மாலிக், திண்டிவனம் ஜாஃபர் அலி,முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், சீத்தாபதி சொக்கலிங்கம், செந்தமிழ் செல்வன், மாவட்ட துணை செயலாளர்கள்மரக்காணம் ரவிக்குமார், அமுதா ரவிக்குமார்,திண்டிவனம் நகர செயலாளர் கண்ணன் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் உள்ளனர்.



ஈரோடு மாவட்டம், அவல்பூந்துறை அருகே உள்ள காளிபாளையம் பகுதியைச் சேர்ந்தவர் விஸ்வநாதன் (எ) மணிக்கு சொந்தமாக சோளிபாளையம் பகுதியில் கல்யாணம் பந்தல் ஸ்டோர் கடையில் திடீர் தீ விபத்து ஏற்பட்டது. தீ விபத்தில் விசேஷங்களுக்கு தேவையான அனைத்து பொருட்களும் எரிந்து சாம்பலானது. தகவல் அறிந்த தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி தீ விபத்து நடைபெற்ற இடத்திற்கு நேரில் சென்று குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி நிதியுதவி வழங்கினார். மேலும் அரசு சார்பில் நஷ்ட ஈடு வழங்க மாவட்ட நிர்வாகத்திடம் ஆவன செய்வதாக கூறினார். நிகழ்வில் மொடக்குறிச்சி மேற்கு ஒன்றிய கழக செயலாளர் சு.குணசேகரன், மொடக்குறிச்சி தாசில்தார் சந்திரசேகர், அவல்பூந்துறை ஆர்.ஐ.சத்யா, விஏஓ., பொன்னார், அவல்பூந்துறை பேரூர் கழகச் செயலாளர் சாமியப்பன் (எ) சண்முகசுந்தரம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## விண்ணில் பாயும் விலைவாசி

# தூங்கிக் கொண்டிருக்கும் மோடி அரசு!

## ‘பீப்பிள்ஸ் டெமாக்ரசி’ தலையங்கம்

இந்த ஆண்டின் செப்டம்பரில், சராசரி விலை வாசி உயர்வு என்பது கடந்த ஒன்பது மாதங்க ளில் இல்லாத அளவிற்கு 5.5 விழுக்காட்டை எட்டியுள்ளது. அதிலும் குறிப்பாக, உணவுப் பொருள்க ளின் விலை உயர்வுகள் 9.2 விழுக்காட்டைத் தாண்டி இருக்கிறது. நாட்டு மக்களில் பெரும்பான்மையான வர்கள் தங்கள் வருமானத்தில் கிட்டத்தட்ட பாதியை உணவுக்காகச் செலவு செய்கிறார்கள். எனவே, உண வுப் பணவீக்கம் பெரும்பாலானவர்களைப் பாதித்தி ருக்கிறது. உணவுப் பொருள்களின் மத்தியில், குறிப்பாக காய்கறிகள் விலை கடந்த ஓராண்டில் கடுமையாக உயர்ந்திருக்கின்றன. தக்காளி 42.4 விழுக்கா டும், வெங்காயம் 66.2 விழுக்காடும், உருளைக்கிழங்கு 65.3 விழுக்காடும் விலை உயர்ந்திருக்கிறது. நாடு முழுதும் உள்ள மக்களால் இவை பெரிதும் உண்ணும் உணவுப் பொருள்களாகும்.

**நுகர்வோர் தலையில் ஏற்றப்படும் சுமை**

அரசாங்கமும், அதற்கு வக்காலத்து வாங்கும் பொருளாதார வல்லுனர்களும், இதற்கு வானிலை சீர்குலைவுகள் தான் காரணம் என்று வழக்கமான சாக்குப்போக்குகளைக் கூறுகின்றனர். ஆயினும் உண்மை என்னவெனில், ஒவ்வோராண்டும் சில காய் கறிகளின் விலைகள் தாங்கமுடியாத அளவிற்கு உச் சத்தை அடைவதும் அதன் காரணமாக ஏற்கனவே வறிய நிலையில் வாழ்ந்து வரும் பெரும்பான்மை மக்களின் குடும்ப வரவுசெலவுத் திட்டங்களிலிருந்து கோடிக்க ணக்கான ரூபாய்கள் பெரும் வர்த்தகர்கள் மற்றும் மொத்த விற்பனையாளர்களின் கருவூலங்களுக்கு மாற்றப்படு கின்றன என்பதும் நடந்து கொண்டிருக்கின்றன. மேலும் பல நுகர்வுப் பொருள்களும் அபரிமிதமான விலை உயர்வைக் கண்டு வருகின்றன. அவற்றுள் ஒன்று சமையல் எண்ணெய் ஆகும். இது கடந்த மூன்று மாதங்களில் கச்சா பாமாயில் விலை 45 விழுக்காட்டிற்கும் அதிகமாக உயர்ந்ததற்கு ஒரு முக்கிய காரணமாகும். கச்சா பாமாயில் உணவுப் பொருள்களைப் பதப்படுத்துவதற்காக மட்டுமல்ல, சோப்புகள் மற்றும் அழகு சாதனப் பொருட்களைத் தயாரிப்பதற்கும் பயன்படுத்தப்படுகிறது. இவற்றின் விலை உயர்வுகளும் இவற்றை உற்பத்தி செய்திடும் நிறுவனங்களால் இவற்றை வாங்கிடும் நுகர்வோர் தலையில் ஏற்றப்படுகின்றன.

**மருந்துகளின் விலையையும் விட்டு வைக்காத அரசு**

பெரிய நிறுவனங்களின் லாப வேட்கைக்கு விசுவாச மாக இருப்பதை வெட்கமின்றி வெளிப்படுத்தும் வகையில் அரசாங்கம் மருந்து (விலைக்கட்டுப்பாடு) உத்தரவைப் பயன்படுத்தி சில அத்தியாவசிய மருந்து களின் விலைகளின் உச்சவரம்பை 50 விழுக்காடு அளவிற்கு உயர்த்திட அனுமதி அளித்திருக்கிறது. இது ஆஸ்துமா, காச நோய், இரத்த சோகை (தல சீமியா) போன்ற நோய்களின் சிகிச்சைக்காகப் பயன் படுத்தப்படும் மருந்துகள் மற்றும் பாக்டீரியா தொற்று களுக்கு சிகிச்சையளிப்பதற்கான முக்கிய நுண்ணு யிர் எதிர்ப்பிகளைப் பாதிக்கிறது. இவ்வாறு இவற்றின் விலைகளை உயர்த்தியதற்கு அரசாங்கத்தின் தரப்பில் முன்வைக்கப்படும் வாதம் என்ன தெரியுமா? இவற்றின் விலைகளை உயர்த்தாவிட்டால் இவற்றை உற்பத்தி செய்திடும் மருந்து நிறுவனங்களுக்கு லாபம் இல்லாமல் போய்விடுமாம்!

**அதீத வரிகள் மூலம்...**

இதற்கிடையில் பெட்ரோலியப் பொருள்கள் மீது அரசாங்கம் விதித்துள்ள அதீத வரிகள் மூலமாக மக்கள் மீது ஏற்றப்பட்டுள்ள மறைமுக வரிச்சுமை கட்டுக் கடங்காமல் தொடர்கிறது. இந்த ஆண்டு ஏப்ரல் முதல் சர்வதேசச் சந்தையில் கச்சா எண்ணெய் விலை 18 விழுக்காடு குறைந்தாலும், பெட்ரோல், டீசல் ஆகிய வற்றின் சில்லறை விற்பனை விலைகளைக் குறைத்தி டாமல் அதே அளவில் மோடி அரசாங்கம் வைத்திருக்கி றது. 202223ஆம் ஆண்டில் மோடி அரசாங்கம் பல்வேறு வரிகள், செஸ் வரிகள், ராயல்டிகள், பெட்ரோலியப் பொ ருள்களின் மீதான வரிகள் ஆகியவற்றின் மூலம் பெற்ற மொத்த வருவாய் 3.5 லட்சம் கோடி ரூபாய்களாகும். 2014இல் மோடி ஆட்சிக்கு வந்த பின்னர், இது வரை அது மக்களிடமிருந்து பெட்ரோலியப் பொருட்க ளுக்கு மட்டும் வரி விதித்து ஈட்டியுள்ள வருவாய் என்பது 26.74 லட்சம் கோடி ரூபாய்களாகும். எவ்வித மான மனசாட்சியுமின்றி அது இவ்வாறு மக்களின் மீது சுமையைப் பல மடங்கு ஏற்றி அவர்களை சொல் லொண்ணாத் துன்பத்தில் தள்ளி இருக்கிறது. ஏனெனில் பெட்ரோலியப் பொருட்களின் மீதான வரிகள் காரணமாக போக்குவரத்து செலவுகள் அதிகரித்து சாமானிய மக்கள் வாங்கும் அனைத்து அத்தியாவசிய உணவுப் பொருள்களும், காய்கறிகளும் விலை உயர்ந்து அவர்களைக் கடுமையாகப் பாதித்து வருகின்றன.

**கார்ப்பரேட்டுகளின் நலன்கள் பாதிக்கப் படாமலிருக்க...**

பணவீக்கத்தைக் கட்டுப்படுத்திட இந்திய ரிசர்வ் வங்கி அதிக கவனம் செலுத்துவதாகக் கூறியபோ திலும், அதனால் எவ்விதப் பயனும் இருப்பதாகத் தெரியவில்லை. பொருளாதார வல்லுநர்களின் சமீ பத்திய பகுப்பாய்வு ஒன்று காட்டுவதென்ன? 2016 மே மாதத்திற்குப்பின் கடந்த 101 மாதங்களில், நுகர்வோர் விலைவாசிக் குறியீட்டெண் (CPIConsumer Price Index) பணவீக்கம் என்பது இந்திய ரிசர்வ் வங்கியின் 4 விழுக்காடு பணவீக்க குறியீட்டைக் காட்டிலும் 72 மடங்கு அதிகரித்திருக்கிறது என்று அது கூறியிருக்கிறது. இந்திய ரிசர்வ் வங்கி பண வீக்கத்தைக் கட்டுப் படுத்த வேண்டுமென்று விரும்புவது எதற்காக வென் றால் பணவீக்கத்தால் மக்களின் நலன்கள் பாதிப்புக்கு உள்ளாகிறதே என்பதற்காக அல்ல, மாறாக வங்கிக் கடன் விகிதங்கள் மற்றும் பிற பணவியல் கொள்கைகள் காரணமாக கார்ப்பரேட்டுகளின் நலன்கள் பாதித்து விடக்கூடாதே என்பதற்காகத்தான்.

**பொது விநியோக முறையை விரிவுபடுத்த மறுப்பு...**

விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்திட பலமுறை அரசாங்கம் வாக்குறுதிகள் அளித்துள்ளபோதிலும் உருப்படியாக ஒரு நடவடிக்கையையும் அது எடுத்திடவில்லை. விலைவாசி உயர்வுக்கு முக்கியக் காரண மாக விளங்கும் பெட்ரோலியப் பொருள்கள் மீதான வரிவிதிப்புக் கொள்கையை அது கைவிடவில்லை. மாறாக வரிவிதிப்பைத் தொடர்ந்து உயர்த்திக் கொண்டே இருக்கிறது. கள்ளச்சந்தையைக் கட்டுப் படுத்திட அனைத்து அத்தியாவசியப் பொருள்களும் வெளிச் சந்தையில் கிடைத்திட, பொது விநியோக முறையை அது நாடு முழுவதற்கும் விரிவுபடுத்திட வேண்டும். ஆனால் அதைச் செய்ய மோடி அர சாங்கம் மறுத்து வருகிறது. வெங்காயம் போன்ற அத்தியாவசிய உணவுப் பொருள்களையும், பருப்பு வகைகள் போன்ற உணவு தானியங்களையும் பதுக்கிவைத்திடும் கள்ளச் சந்தைக்காரர்கள் மீதும், கருப்புச்சந்தைக்காரர்கள் மீதும் இருக்கின்ற சட்டங்களை அமல்படுத்தி கடும் நடவடிக்கைகள் எடுத்திட வேண்டும். அவசியமான மருந்துகளை பொதுத்துறை நிறுவனங்கள் மூலம் உற்பத்தி செய்திட வேண்டும். கல்வி மற்றும் பொது சுகாதாரம் ஆகியவற்றைத் தனியார்மயமாக்கும் கொள்கையைக் கைவிட வேண்டும். இவைதான் அனைத்துப் பொருள்கள் மீதும் செங்குத்தாக விலை உயர்வதற்கு முக்கியக் காரணங்களாகும். சமையல் எண்ணெய்கள், பருப்பு வகைகள் உள்ளிட்ட பல்வேறு அத்தியாவசிய உணவுப் பொருள் கள் உற்பத்தியில் தன்னிறைவை நோக்கி முன்னெ டுத்துச் சென்றிட வேண்டும். வெறுமனே வாயால் வடை சுடுவதும், படாடோபமான தேர்தல் பிரச்சா ரங்களும் விலைவாசி யைக் கட்டுப் படுத்தப்போவ தில்லை. மாறாக மேலே கூறியவாறு அனைத்து நடவ டிக்கைகளை யும் எடுத்தால்தான் விலைவாசியைக் கட்டுப்படுத்திட முடியும். ஆயினும் மோடி அரசாங் கம் இவற்றைச் செய்ய மறுத்து நன்கு உறங்கிக் கொண்டிருக்கிறது.

**நன்றி: தீக்கதிர்**
**2.11.2024**

“
- ✶ செப்டம்பர் 2023ல் சராசரி விலைஉயர்வு 5.5%
- ✶ உணவுப் பொருட்களின் விலை உயர்வு 9.2%
- ✶ காய்கறிகளின் விலை உயர்வு:
- ✶ தக்காளி: 42.4%
- ✶ வெங்காயம்: 66.2%
- ✶ உருளைக்கிழங்கு: 65.3%
- ✶ கச்சா பாமாயில் எண்ணெய் விலை 3 மாதங்களில் 45% உயர்வு
- ✶ பெட்ரோலியப் பொருட்கள் மூலம் மத்திய அரசின் வருவாய் (2022–23): ₹3.5 லட்சம் கோடி
- ✶ 2014 முதல் பெட்ரோலியப் பொருட்கள் மூலம் மொத்த வசூல்: ₹26.74 லட்சம் கோடி
- ✶ 2016 மே முதல் 101 மாதங்களில்:
- ✶ 72% காலத்தில் பணவீக்கம் ரிசர்வ் வங்கி (RBI) இலக்கான 4%ஐ தாண்டியது
- ✶ 28% காலத்தில் 6% என்ற அதிகபட்ச வரம்பையும் தாண்டியது
- ✶ சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை 18% குறைந்தும் உள்நாட்டில் விலை மாற்றமில்லை
- ✶ அத்தியாவசிய மருந்துகளின் விலை உச்சவரம்பு 50% உயர்த்தப்பட்டது. ”



பெரம்பலூர் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், பெரம்பலூர் மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளரும் வேப்பந்தட்டை ஒன்றியக் குழு துணைத் தலைவருமான எம்.ரெங்கராஜ் உடல் நிலை சரியில்லாததை அறிந்து மருத்துவமனைக்கு நேரில் சென்று உடல் நலம் விசாரித்தார். மாவட்டப் பிரதிநிதி எஸ்.அழகுவேல் உள்ளார்.

## நாமக்கல் மேற்கு மாவட்ட

# பேரூர்க் கழக பாக முகவர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் அறிவிப்பு

*நாமக்கல், நவ. 4 -*

நாமக்கல் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட பேரூர் கழக பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று நடைபெறுகிறது என மாவட்டச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு;-



கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொகுதி மேற்பார்வையாளர் கூட்டத்தில் அறிவித்ததன் படி வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல், வாக்காளர் பெயர் சேர்த்தல், நீக்கல் முகாம் குறித்து பாக முகவர்கள் (பி.எல்.ஏ.2) ஆலோசனைக் கூட்டம் இன்று (4- 11- 2024 திங்கட் கிழமை) காலை 11 மணிக்கு பரமத்தி வேலூர் தொகுதி அலுவலகம், கலைஞர் அரங்கில் நடைபெறுகிறது.

இதில் நான் ( நாமக்கல் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில்) , பரமத்திவேலூர் தொகுதி பொறுப்பாளரும், மாநில அயலக அணி துணைச் செயலாளருமான திருமதி. உமா ராணி ஆகியோர் ஆலோசனை வழங்கி பேசுகின்றோம்.

இதில் பேரூர் கழகச் செயலாளர்கள் முன்னிலை வகிக்கின்றனர்..

இக்கூட்டத்தில் பரமத்தி வேலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பொத்தனூர், பாண்டமங்கலம், வெங்கரை, வேலூர், பரமத்தி ஆகிய பேரூர் பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் பேரூர் பாக முகவர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## அமைச்சர் க.பொன்முடி சிறப்புரை! விழுப்புரம் மாவட்டத்திற்கு வருகை தரும்

# துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு!

## மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்! பெ.சேகர் - செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

*திண்டிவனம், நவ. 4 -*

விழுப்புரம் மாவட்டத்திற்கு வருகை தரும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் சிறப்பான வரவேற்பளிப்பது உள்ளிட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுகநிர்வாகிகள் அவசர ஆலோசனை கூட்டம் திண்டிவனம் சென்னை தேசிய நெடுஞ்சாலையில் உள்ள ஹோட்டல் ஆர்யாசில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட அவை தலைவரும் ,செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் தலைமை தாங்கினார். மாவட்டத் துணைச் செயலாளர்கள் மரக்காணம் ரவிக்குமார், அமுதா ரவிக்குமார், அருணகிரி, ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் ப. சேகர் அனைவரையும் வரவேற்றார்.

கூட்டத்தில் கழகத் துணை பொது செயலாளர், வனத்துறை அமைச்சர் டாக்டர் க.பொன்முடி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் விழுப்புரம் மாவட்டத்தில் நவம்பர் 5, 6 ஆகிய இரு தினங்களில் நடைபெறும் கழக நிகழ்ச்சிகளிலும், அரசு நிகழ்ச்சிகளிலும் பங்கேற்க வருகை தரும் தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் திண்டிவனம் சென்னை தேசிய நெடுஞ்சாலையில் உள்ள ஹோட்டல் ஆரியாஸ் எதிரில் சிறப்பான வரவேற்பு அளிப்பது எனவும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் ஊராட்சிகளில் கழக இருவண்ண கொடியை ஏற்றி இனிப்புகள் வழங்கியும் பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கியும், ஏழைகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்பாக கொண்டாட வேண்டும்.

விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து நகர, பேரூராட்சி வார்டுகளில், கிராம ஊராட்சி வார்டுகளிலும் வாக்காளர் பெயர் பட்டியலில் புதிய வாக்காளர்கள் சேர்த்தல், நீக்குதல், பணிகளை கழக தோழர்கள் முன்னின்று செய்திட வேண்டும்.உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்ற ப்பட்டன.

கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள 3 தொகுதிகளின் பொறுப்பாளர்கள்கடலூர் இள.புகழேந்தி,ப.அப்துல் மாலிக், ஏ .ஜாபர் அலி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன்,சீத்தாபதி சொக்கலிங்கம், செந்தமிழ் செல்வன், தலைமை தீர்மான குழு உறுப்பினர் செஞ்சி சிவா,செயற்குழு உறுப்பினர்கள்விஜயகுமார், நெடுஞ்செழியன், சீனிராஜ், பொதுக்குழு உறுப்பினர்கள் கதிரேசன், பாலகிருஷ்ணன், வீடுர் ரவி, சாந்தி ஏழுமலை ,செல்வராஜ்,ஒன்றிய கழக செயலாளர்கள் சொக்கலிங்கம், அண்ணாதுரை, ராஜாராமன், தயாளன், பழனி, ரவிச்சந்திரன், மணிமாறன், செழியன், துரை, இளம்வழுதி,பச்சையப்பன், விஜயராகவன், நாராயணமூர்த்தி, சாந்தி சுப்பிரமணியன், பேரூர் செயலாளர்கள் கார்த்திக், சம்பத், மாவட்ட அணி அமைப்பாளர்கள் ஆனந்த்,எம். எல். பி .கோபிநாத், ராஜசக்தி,,கே செந்தில் குமார் , ப.செந்தில் குமார், டாக்டர் அசோக், கோ. தமிழரசன்,திருமலைதங்கராஜ் ஊரல்அண்ணாதுரை, விஜயராகவன் ,சந்திரன்,செந்தில் முருகன், சிவகாமி, திலகவதி, ரவிச்சந்திரன், ரோமியன், காதர் நவாஸ் ,மயிலம் ஒன்றிய பெருந்தலைவர் யோகேஸ்வரி மணிமாறன்.திண்டிவனம் நகர மன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் டி.கே.பி ரமேஷ், எம்.டி.பாபு, அண்ணாமலை, விஜயகுமார், உதயகுமார்உள்ளிட்ட மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர ,பேரூர், கழக நிர்வாகிகள், நகர மன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

திண்டிவனம் நகரச் செயலாளர் ஆசிரியர் கண்ணன் நன்றி கூறினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வேதாரண்யம் செ.யூசுப்
### நவம்பர் 4 (2013)



பள்ளிப் பருவத்திலிருந்தே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு வேதாரண்யம் பகுதியில் கழகத்தை வளர்த்த முன்னோடிகளில் இவரும் ஒருவர்.

திருத்துறைப்பூண்டி வட்டக் கழக துணைச் செயலாளராகவும், 25 ஆண்டுகள் தொடர்ந்து வேதாரண்யம் ஒன்றியக் கழகச் செயலாளராகவும், தலைமை செயற்குழு உறுப்பினர், பொதுக்குழு உறுப்பினர், தலைமைக் கழக பேச்சாளராகவும் திறம்பட பணியாற்றியவர்.

இரண்டு முறை நாகை மாவட்ட ஊராட்சி மன்றத் துணைத் தலைவராகப் பணியாற்றி வேதாரண்யம் பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

1964ல் நடைபெற்ற மொழிப் போராட்டத்திலும், கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**